Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X



# Andal's Inner Longing Expressed in *Nachiyar Thirumozhi*

**Dr. M. Saraladevi,** Assistant Professor, Tamil Department,
RVS College of Engineering and Technology, Coimbatore, Tamilnadu. India.
**ORCiD: https://orcid.org/0009-0007-4689-3632**
**DOI: 10.5281/zenodo.14744692**

## Abstract

*The Tamil Bhakti Movement was a religious, socio-political movement that operated in Tamil Nadu from the seventh to the end of the ninth century AD. It was formed in support of many by promoting Vaishnavism and Saivism. The Pallavas ruled during this period. During this period, Prakrit gained influence as the official language and was the language of the government. The tradition of content found in the Saiva Tirumurai and Vaishnava Prabandhas has changed according to the political environment of the time. Andal has expressed her natural speech among the pioneers of Vaishnava literature. Andal is the only woman of the 12 Alvars. Truth and devotion can be found in "Nachiyar Thirumozhi". Andal's poems have a natural flow of thought. Andal's natural speech presents an alternative tradition that deviates from the Tamil literary tradition. This truth becomes clear when Andal's poems are viewed from the perspective of women. It is in this context that women began to undertake a transformation through the platform of devotion. Andal is a prominent example of such a woman and this study aims to reveal how she is affected by her subjective experiences through her songs.*

**Keywords:** Aandal, Inner Longings, Nachiyar Thirumozhi, Tamil Bakthi Movement.

**References**

[1] Anandhi, N. Dr. *Perumal Thirumozhi*. Ramaiya Patippagam, 2010.
[2] Kannan, S, *Periyazhvar Andal Pasurankal*. Samooka Samayap Panpattu Aayvu.
[3] Sathara Malathi. *Uyarpavai*. Santhiya Pattippagam, 2005.
[4] Susila, M.A. *Tamililakkiya Veliyil Penmozhiyum Pennum*. Meenaksi Putthakalayam, Madurai, 2001
[5] Selvi Thirusanthiran, *Tamizh Varalattu Padimankal Silavattil Pennilai Nokku*. Kumaran Puthaga Nilaiyam, 1997.
[6] Nadarasan, T.S. *Thiranayvuk Kalai-Anukumuraikalum Kolkaikalum*.
[7] Pathima Susaimani, Dr. *Tamil Punaikathaikalil Ulaviyal*. Ulaka Tamizharaichi Niruvanam, 2007.
[8] Manavalan, A.A. *Tamil Bakthi Ilakkiyam*. Sakittiya Akademi, New Delhi, 2004.
[9] Vellaivaranan, K, Perasiriyar. *Tholkappiya Porulathikaram*. Madurai Kamarasar Palkalaikazhakam, Madurai, 1983.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X



# நாச்சியார் திருமொழியில் ஆண்டாள் வெளிப்படுத்தும் அகப்போராட்டங்கள்

**முனைவர் மு. சரளாதேவி,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, ஆர்.வி.எஸ். பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, சூலூர், கோவை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0007-4689-3632
DOI: 10.5281/zenodo.14744692

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழ்ப் பக்தி இயக்கம் கி.பி.ஏழு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு முடிவு வரை தமிழகத்தில் செயற்பட்ட சமய சமூக அரசியல் இயக்கமாகும். தமிழர்களின் பல சங்ககால விழுமியங்களுக்கு சார்பாகவும், வைணவ சமயம், சைவ சமயம் ஆகியவற்றை முன்னிறுத்தியும், அக்காலப்பகுதியில் தமிழரிடையே செல்வாக்கு பெற்றிருந்த சமண, பௌத்த சமயங்களுக்கு எதிராகவும் தமிழ்ப் பக்தி இயக்கம் அமைந்தது. வைணவ இலக்கியத்தின் முன்னோடிகளான ஆழ்வார்களுள் ஆண்டாள் ஒருவரே பெண். மற்றவர்கள் அனைவரும் ஆண்கள். ஆண்களாக இருந்து கொண்டு பெண்போல பாவித்துக் கொண்டு பாடுவது செயற்கைத் தனம் கொண்டது.பெண்ணாகவே இருந்து பெண்ணாகவே பாடுவதில்தான் உண்மையும் உயிர்ப்பும் இருக்க முடியும். அவ்வகையில், ஆண்டாளின் கவிதைகள் இயற்கையான மன ஓட்டத்தைக் கொண்டிருப்பன. ஆண்டாளின் இயற்கையான பெண்பேச்சு தமிழ் இலக்கிய மரபிலிருந்து விலகிய மாற்று மரபை முன்னிறுத்துகிறது.பெண்நிலை சார்ந்து ஆண்டாளின் கவிதைகளை நோக்கும்போது இவ்வுண்மை புலப்படுகின்றது. ஒரு பெண்ணின் உணர்வுகளை வெளிக்காட்டுவதற்குப் பல்வேறு சமூகத் தடைகள் மரபுகளின் பேரில் உருவாக்கப்பட்டிருந்தன. பெண்ணின் இயற்கைக் குணாம்சத்தை, இயற்கைக் காதலை, இயற்கைக் காமத்தை, எக்காரணம் கொண்டும் ஒரு பெண் வெளிப்படுத்தக் கூடாது என்கிற கட்டுப்பாடுகள் பெண்ணை இறுக்க நிலையிலே வைத்திருந்தன. இந்நிலையில்தான், பக்திநிலை என்ற வெளிப்பாட்டுத்தளம் மூலமாக மடைமாற்றம் செய்து கொள்ளுதலைப் பெண்கள் மேற்கொள்ளத் தொடங்கினர். அப்படியான பெண்களில் ஆண்டாள் முதன்மையானகவராக திகழ்கிறார் அவரின் பாடல்களின் வழியாக அவரின் இந்த சமூகம் எப்படியான அகநிலை பாதிப்புக்கு உட்படுத்திருக்கிறது என்பதை வெளிப்படுத்துவதாக இந்த ஆய்வு அமைகிறது.*

**குறிப்புச்சொற்கள்:** ஆண்டாள், உள் ஏக்கம், நாச்சியார் திருமொழி, தமிழ் பக்தி இயக்கம்..

## முன்னுரை

சைவத் திருமுறைகளிலும் வைணவப் பிரபந்தங்களிலும் காணலாகும் அகப்பொருள் மரபானது, அக்காலத்தின் பக்திநிலைச் சூழலுக்கேற்றவாறு மாற்றங்களைப் பெற்றிருக்கிறது.

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

அதாவது, கடவுளைக் காதலராகப் பாவனை செய்துகொண்டு பாடுதலை பக்திநிலைக் கவிதைகளில் காணலாம்.இத்தகைய அகப்பொருள் சார்ந்த பக்திநிலை மரபு சைவ-வைணவ இலக்கியங்களில் பின்பற்றப்பட்டிருக்கின்றது. அவற்றுள் வைணவ சமயம் சார்ந்து பாடியவர்களான நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், குலசேகர ஆழ்வார், பெரியாழ்வார் போன்றோர் பெண் மனவுணர்வுகளை வெளிப்படுத்தினர். ஆயினும், அவை ஆணின் குரலாகவே அமைந்திருந்தன. ஆனால், ஆண்டாளோ தனது இயல்பான பெண் பேச்சையே வெளிப்படுத்தியுள்ளார். "தமிழ் பக்தி இயக்கம் கி.பி 600 முதல் கி.பி 900 வரையான காலப்பகுதியினை பக்தி இயக்கம் என்பர். இக்காலத்தில் பல்லவர்கள் ஆட்சியாண்டனர். இந்தக் காலப்பகுதியில் பிராகிருதம் ஆட்சி மொழியாகவும் அரசவை மொழியாவும் செல்வாக்கு பெற்று "தமிழ்ப்பகைமையுணர்வும்" "தமிழர்களின் உணர்வாளுமையும்" பாதிக்கப்பட்டிருந்தது." (மணவாளன், அ. அ. பக். 14-150) என்கிறார் ஆர்.மணவாளன்.

நாச்சியார் திருமொழி என்னும் நூல் வைணவ ஆழ்வார்களுள் ஒருவராகிய ஆண்டாளால் பாடப்பட்டது.வைணவ நூல்களின் தொகுப்பபாலான நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் ஒரு பகுதியாகிய இந் நூல், அத் தொகுப்பில் 504 தொடக்கம் 646 வரையான பாடல்களாக இடம் பெறுகின்றது. 143 பாடல்களைக் கொண்ட இந்நூல், கண்ணனைத் தனது நாயகனாகக் கொண்டு அவனை அடையத் துடிக்கும் ஆண்டாளின் தவிப்பை எடுத்துக் காட்டுகின்றது.பாடல்கள் அனைத்திலும் காதல் சுவை மேலோங்கி இருப்பதைக் காணலாம். மேலும் அதன் சிக்கலான தன்மை மற்றும் பெண் ஆசையின் வெளிப்படையான பக்தி, சமூகத்தின் மீதான கசப்பு, கடவுள் மீது கொள்ளும் காதல், காமம் ஆகியவை குறித்து பேசுகிறது.

**இறைவன் மீது மானுடப்பெண்ணின் காதல்**

சங்ககாலத் திணை இலக்கிய மரபுகளுள் ஒன்றான 'அகப்பொருள் மரபு' பக்திநிலை இலக்கியத்திலும் படிய நேர்ந்திருக்கிறது.சங்க கால அகப்பொருள் இலக்கிய மரபு பெண்ணுக்கும் ஆணுக்குமான காதலை மய்யமிட்டிருப்பது. 'சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்' (அகம். 5) என்ற மரபைப் பின்பற்றித்தான் அகத்திணைக் கவிதைகள் அமைந்திருக்கின்றன. தம்மைப் பெண்ணாகவோ அல்லது ஆணாகவோ பாவித்துக்கொண்ட காதல் அனுபவ வெளிப்பாடுகள் மானுடம் பற்றியதாக மட்டுமே இருக்கவேண்டியதில்லை. கடவுள் பற்றிய காதல் அனுபவ வெளிப்பாடுகளும் அகப்பொருள் மரபைச் சார்ந்ததுதான் எனும் வகையில்

**காமப்பகுதி கடவுளும் வரையார்**
**ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர் (தொல். பொரு. 81)**

என்கிறது தொல்காப்பியம்.இத்தகைய அகப்பொருள் மரபின் தொடர்ச்சியைப் பக்திநிலைக் கவிதைகளிலும் காணலாம்.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X


திருமாலுக்குச் சூட வேண்டிய மாலையைத் தான் அணிந்து பார்க்க வேண்டும் என்ற காதல் உணர்வு இயல்பாகவே ஆண்டாளின் உள்ளத்தில் தோன்றுகிறது. ஏனெனில், மலர்களோடும் மாலைகளோடும்தான் சிறுவயதில் இருந்தே வளர்ந்து வருகிறார்.இந்த மாலைகளும் மலர்களும் மணவாழ்வையும் மங்கலத்தையும் குறித்து நிற்கக் கூடியவை.ஆகவே, ஆண்டாள் கட்டிக் கொடுக்கின்ற மலர் மாலைகள் ஆண்டாளின் மணவாழ்க்கை விருப்பத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.ஏற்கனவே திருமால் மீது கொண்ட விருப்பங்களும் ஒன்றுகூடி திருமால் மீதான காதலாக ஆண்டாளிடம் உருவெடுக்கின்றது.

**அவரைப் பிராயம் தொடங்கி என்றும்**
**ஆதரித் தெழுந்த என் தடமுலைகள்**
**துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத்**
**தொழுது வைத்தேன் (நா. திரு. 1: 4)**

என ஆண்டாள் குறிப்பிடுவதின் மூலம், குழந்தைப்பருவம் முதலே திருமாலின் மீது ஈடுபாடும் காதலும் கொண்டு ஆண்டாள் வளர்ந்து வந்திருக்கிறார் என அறிய முடிகின்றது.

நாச்சியார்திருமொழி காமத்துயரத்தையும் வெளிப்படுத்துகின்றன. திருப்பாவை மார்கழி நோன்புச் சடங்கு குறித்துப் பாடப்பட்டிருந்தாலும், அதனுள் திருமாலின் மீதான காதல் உள்ளத்தை வெவ்வேறு நிலையில் அவர் புலப்படுத்தியிருப்பதைக் காணமுடியும். அதாவது, “ஒரு பெண் தனக்குப் பிடித்தவனிடம் திட்டமிட்டுப் போய்ச் சேர்வதுதான் திருப்பாவையின் பாடுபொருள்” (சதாரா மாலதி. பக். 156) ஆகும். பெண் ஆண் மனக்கலப்புகளின் குறிப்புகளை மிக நுட்பமாக விவரித்துச் சொல்வதாகத்தான் திருப்பாவை அமைந்திருக்கிறது.

திருமாலிடம் கொண்ட காதல் வேட்கையும் ஆவலும் முடிவில்லாத நிலையைக் கொண்டிருப்பினும், திருமாலை அடைவதில் மட்டும் உறுதியைக் கொண்டிருக்கிறார் ஆண்டாள். அதனால்தான்,

**குத்துவிளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில் மேல்**
**மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலெறிக்**
**கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்**
**வைத்துக்கிடந்த காட்சியை மலர்மார்பா (நா.திரு.19)**

என்ற கனவு நிலைக் காட்சியை வெளிப்படுத்துகிறார் ஆண்டாள்.

**காதல் நிராகரிப்பின் ஆற்றாமை**

காதல் நிராகரிப்பால் உண்டான ஆற்றாமைத் துயரம் அவரின் காதலை மேலும் மேலும் வளர்த்தெடுக்கின்றது.தான் கொண்ட காதலில் உறுதியாய் இருக்கச் சொல்கிறது மனம்.இன்றைக்கு இல்லாவிட்டாலும் என்றைக்காயினும் காதல் கைகூடும் என்ற நம்பிக்கை ஆண்டாளுக்குள் இருந்திருக்கிறது. அதனால் தான்,

**எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**உற்றோமே யாவோம்! உனக்கே நாம் ஆட்செய்வோம்!**
**மற்றைநம் காமங்கள் மாற்றேல் (நா.திரு.29)**

என்ற உறுதிப்பாட்டை அவர் வெளிப்படுத்துகிறார். ஓர் ஆண் மீது பெண் கொள்கிற காதல் எத்தகைய உணர்ச்சிகளைக் கொண்டிருக்கிறதோ, அத்தகைய உணர்ச்சிக் குவியல்களையே ஆண்டாளின் கவிதைகள் கொண்டிருக்கின்றன.மானுடத்தின் காதல் உணர்ச்சியைத்தான் ஆண்டாளும் கவிதையாக்கியிருக்கிறார்.

**மணவாழ்க்கை நிராகரிப்பும் மடைமாற்றப்படும் வெறுப்புணர்வும்**

ஆண்டாள் வாழ்ந்த காலத்தியச் சமூக அமைப்பு, பெண்களைக் குடும்ப அமைப்பிற்குள் இருத்தி வைப்பதற்காக மணவாழ்க்கைமுறை குறித்தான மிகை மதிப்பீடுகளை உருவாக்கி வைத்திருந்தது. பெண் ஆண் உறவைக் கொண்ட மணவாழ்க்கை முறைக்கு முதன்மை அளிக்கப்பட்ட சமூக அமைப்பின் தாக்கம் ஆண்டாளுக்குள்ளும் இருந்திருக்க வேண்டும்.ஆண்டாளும் அத்தகைய மணவாழ்க்கை முறையைத்தான் விரும்பியிருக்கிறார்.

**தந்தையும் தாயும் உற்றாரும் நிற்கத்**
**தனிவழியே போயினாள் என்னும் சொல்லு**
**வந்த பின்னைப் பழிகாப்பு அரிது (நா.திரு. 12:3)**

ஆண்டாள் எதிர்பார்த்த மணவாழ்க்கை வாய்க்கப்பெறவில்லை.அதனாலேயே மானுட மணவாழ்க்கை மீதான வெறுப்பையும், மானுட ஆண்கள் மீதான எதிர்ப்பையும் ஆண்டாள் வெளிப்படுத்துகிறார். இவ்வெதிர்ப்பை நேரிடையாக வெளிக்காட்ட முடியாத சூழலில்தான் அவ்வெதிர்ப்பைப் பக்திநிலை வடிவில் திருமாலைக் மணமுடிக்க வேண்டுமென்று துடிப்பதாகவும் மடைமாற்ற முறையில் வெளிப்படுத்தியிருக்கிறார் எனக் கருதலாம். "மாற்றுத்தேடலில் தன் ஏக்கத்தை மறக்க முயலும் மனம் இக உலக ஏக்கம் கடந்து ஆன்மீகத் தோட்டத்தில் இறங்குதல் மடை மாற்றம்(Sublimation) எனப்படும்" (பாத்திமா சூசைமணி, முனைவர். பக் 42). மானுட உலகின் ஆண்களின் மீதான எதிர்ப்பை, தன்னில் எழும் காதல் உணர்ச்சியும் ,காம வேட்கையும் திருமாலுக்குரியது எனப் பாடுவதின் மூலம் காட்டுகிறார். "எந்த ஓர் உணர்வுத் தளத்தின் தீவிரத் தன்மையும் 'பக்தி' என்பதால் மடைமாற்றி விடலாம். தீராத காமமும், காமம் பற்றிய அச்சமும்; தீராத காதலும், காதல் மீதான அருவருப்பும்; பெரும் திளைப்பும், திளைப்பை மறுக்கும் துறப்பும் என எதிர் எதிர்த் தீவிரத் தன்மைகளைக் கையாளும் இடம் இந்த பக்தி." (ஆனந்தி, ந. முனைவர். பக். 15) அவ்வகையில் நோக்கும்போது ஆண்டாளின் காதல் துயரமும் காம வேட்கையும் பக்தியின் வழியாக மடைமாற்றம் செய்யப்பட்டிருக்கிறது எனக் கருத இடமுண்டு.

**தாய்மையின் புறக்கனிப்பும், கசப்புணர்வும்**

பெற்ற தாய் வெறுத்து ஒதுக்கியதனால் அனாதையாகிப் போனதும், அனாதையான பிறப்பைக் கொண்டதால் மணவாழ்வு கிட்டாமல் மறுபடி அனாதையாக்கப்படுவதும் ஒரு

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal
Pandian Journal Of Women's Studies
We are New Women

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

பெண்ணின் வாழ்வில் நிகழும் கசப்பான அனுபவங்கள். மானுட உலகின் மனிதர்களால் ஏற்பட்டிருக்கும் அவமானங்கள், மானுட உலகின் ஆண்களால் நிராகரிக்கப்பட்ட மணவாழ்க்கை போன்றவையால் மானுட உலகின் ஆண்களையே நிராகரிக்கும் முடிவுக்கு ஆண்டாளைத் தள்ளியிருக்க வேண்டும்." உள்ளத்து உணர்வுப் பிரதிபலிப்பாக படைப்பாளனின் நடையைக் காணுதல்" (நடராசன், தி.சு. பக். 86) என்ற கருத்தை, **"வெற்றவெறிதே பெற்ற தாய் வேம்பே ஆக வளர்த்தாளே" (நா.திரு.13:7)** குறிப்பின்வழி தமது கசப்பான அனுபவத்தைப் பகிர்ந்துகொள்கிறார் ஆண்டாள். அதனால் தான், **"மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழ்கில்லேன்" (நா.திரு.1:5)** என்று மானுட உலக ஆணினத்தின் மீதான எதிர்ப்பை வெளிக்காட்டுகிறார். அதுமட்டுமில்லாமல் தாய் யாரென்று அறியாமத பெண்ணை இந்த உலகம் எப்படியான கேலிகளை கூறி அவன் மனதை வாடச்செய்தார்களோ அதன் பாதிப்பின் வெளிப்படுதான் ஆண் ஒருவன் சரியா இருந்திருந்தால் தன் தாய் தன்னை புறகனித்திருக்க மாட்டாள் என்ற புரிதல் ஒட்டுமொத்த ஆண் சமூகத்தின் மீதும் வெறுப்பை ஈற்படுத்தியிருக்கிறது. "மரபு வழியாக ஒரு பெண்ணிடம் எதிர்ப்பார்க்கப்படும் அழகு, தோற்றப் பொலிவு, அவற்றுக்கெல்லாம் மேலாகக் கல்வி, அதனால் விளைந்த தனித்த ஆளுமையான கவித்திறன் ஆகிய அனைத்தும் தன்னிடம் கைகூடியிருந்தபோதும், பிறப்பால் திருமணச் சந்தையில் தான் புறக்கனிக்கப்பட்ட ஆழ்மன ஆவேசம், பக்திப் பின்னணியோடு ஒருங்கிணைந்து இயக்கிதன் விளைவே மனித ஆணுக்கு எதிரான எதிர்ப்புக் குரலாக அவர் பாடல்களில் எதிர் வினையாற்றியிருக்கிறது" (சுசீலா, எம்.ஏ. பக். 13-14) எனலாம்.

**பெண்ணுடலை புரிதலும் கொண்டாடுதலும்**

பெண்ணுடல் குறித்துப் பேசுவதில், குறிப்பாகப் பாலியல் நிலைகளில் பெண்ணுடல் அனுபவத்தைப் பேசுதல் பெண்ணுக்கு விலக்கப்பட்டதாக இருந்த சூழலில், பெண்ணுடலுக்குள் நிகழும் பாலியல் கிளர்ச்சிகள் குறித்து; பாலியல் துய்ப்பு குறித்துப் பகிர்ந்து கொள்ளும் போக்கு பெண்களுக்குள்ளேயே நிகழ்ந்து கொண்டிருந்த சமயத்தில், பெண்ணுடல் அனுபவங்களைக் கவிதையாக்கி, அவற்றைப் பொதுவெளியில் முன்வைக்கிறார். அச்சமும் நாணும் மடனும் முந்துறந்தநிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப (தொல்.பொரு.96) என்றும் நாணும் மடனும் பெண்மைய ஆகலின் (தொல். பொரு. 106) என்றும் தொல்காப்பியம் பெண்மையின் குணங்களாகச் சொல்லப்பட்டதற்கு மாற்றாக, தனக்கு வெட்கம் என்பது தேவையில்லை என்ற மாற்றுக்குரலை, **நாணி இனியோர் கருமமில்லை / நால் அயலாரும் அறிந்தொழிந்தார் (நா.திரு.12:2)** என வெளிப்படுத்துகிறார் ஆண்டாள். நாச்சியார் திருமொழியில் காதல் முற்றிய பெண்ணின் காம வேட்கை நிலையினையும் காணமுடியும்.

**கள்ளவிழ் பூங்கணை தொடுத்துக் கொண்டு**
**கடல்வண்ணன் என்பதோர் பேரெழுதி (நா.திரு.1:2)**
**கொத்தலர் பூங்கணை தொடுத்துக் கொண்டு**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**கோவிந்தன் என்பதோர் பேரேழுதி (நா.திரு.1: 3)**

என, காதல் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட காதலரின் பெயரை எழுதி எழுதிப் பார்க்கும் காதல் மனத்தின் செயல்பாடுகளை அவர் வெளிப்படுத்துகிறார். திருமாலையே தன் காதலராக நினைத்துக் கிடக்கும் ஆண்டாள். மேலும்,

**வண்ணம் திரிவும் மனம் குழைவும் மானம் இலாமையும் வாய்வெளுப்பும்**
**உண்ணல் உறாமையும் உள்மெலிவும் (நா.திரு. 12: 7)**

தமக்கு ஏற்பட்டிருக்கிறது என்கிறார். காதல் முற்றிப்போனதின் அறிகுறிதான் இவ்வெளிப்பாடுகள். காதல் நோயால் அவதியுறும் ஆண்டாளின் மனத்துடிப்புகள் மற்றவருக்கு அறிய வாய்ப்பில்லை. அவரவரின் அவதி அவரவருக்குத்தானே தெரியும் என்பதை, **"ஆர்க்குமென் நோய் இது அறியலாகாது" (நா.திரு. 12: 5)** என வெளிப்படுத்துகிறார்.

காதல் முற்றி காமம் அதிகரிக்கத் தொடங்குகின்றது.பாலியல் துய்ப்புக்கான நாட்டமும் வேட்கையும் பெண்ணுடலுக்குள் மாற்றத்தை உண்டு பண்ணக் கூடியவை. காதலும் காமமும் பெண்ணின் உடல் மனமெங்கும் பரவியதால் வேட்கை நிரம்பிய உடலை ஆணின் உடல் வந்து தணிக்க வேண்டும் என்ற பெண்ணின் உடல் கிளர்ச்சியை ஆண்டாள் வெளிப்படுத்துகிறார் அதை,

**பொங்கிய பாற்கடல் பள்ளிகொள்வானைப் புணர்வதோர்**
**ஆசையினால் என்கொங்கை கிளர்ந்து குமைத்துக் குதூகலித்து**
**ஆவியை ஆகுலம் செய்யும் (நா. திரு. 5: 7)**

என வெளிப்படுத்துகிறார். பாலியல் துய்ப்பின் விருப்பமும், அதனால் உண்டான உடல் கிளர்ச்சியும் இங்கு வெளிப்படுத்தபப்பட்டிருக்கிறது. பாலியல் துய்ப்புக்கான வேட்கை பெண்ணின் உடலெங்கும் பரவியதால் காமத்தீ சுடர்விட்டு எரிந்துகொண்டிருக்க, வேட்கையுற்ற உடல் அவதியைத் வெளிப்படுத்தும் போது,

**காமத்தீயுள் புகுந்து கதுவப்பட்டு இடைக்கங்குல்**
**அற்ற குற்றம் அவைதீர அணைய அமுக்கிக் கட்டீரே (நா., திரு. 13: 7)**

என்பதின் மூலம் பெண்ணின் முலைகள் படும் துயரத்தை வெளிப்படுத்துகிறார். ஒரு கட்டத்தில் பெண்ணின் காமத்துயர் உச்சத்தை அடையும்போதும், பாலியல் துய்ப்பு நிறைவேறாத போதும்,

**உள்ளே உருகி நைவேனை உளளோ இலளோ என்னாத,**
**கொள்ளை கொள்ளிக் குறும்பனைக் கோவர்த்தனனைக் கண்டக்கால்**
**கொள்ளும்பயன் ஒன்றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும்**
**அள்ளிப்பறித்திட்டு அவன் மார்பிலெறிந்து என் அழலைத் தீர்வேனே (நா., திரு. 13: 8)**

என்று உரக்கச் சொல்கிறார். பாலியல் துய்ப்பு நிறைவேறாத ஆற்றாமையின் வெளிப் பாடாகவே அவ்வாறு வெளிப்படுத்துகிறார். பெண்ணின் காதல் உணர்ச்சியும் காம வேட்கையும் பெண்ணின் முலைகளில் மய்யம் கொண்டிருப்பன என்பதை ஆண்டாள்

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

கவிதைகள்வழியும் அறிய முடிகின்றது. காதல் வயப்பட்ட ஒரு பெண்ணின் மனத் தவிப்புகளும், துயரங்களும், காமவேட்கைகளும், ஆற்றாமை உணர்வுகளும் எவ்விதத் தடைகளுமற்று பெண்ணின் உணர்ச்சிகளாலே பெண்நிலை சார்ந்து வெளிப்படுத்தும் பெண் ஆளுமை ஆண்டாளிடம் காணப்படுகின்றது.

**முடிவுரை**

பெண்ணுடல் குறித்து ஆண் பாடுவதற்கும், பெண்ணுடல் குறித்துப் பெண் பாடுவதற்கும் வேறுபாடுகள் நிறைய உண்டு.பெண்ணுடல் குறித்து ஆண்டாள் பாடிய கவிதைகள் அசல் பெண் தன்மை கொண்டவை. மேலும், பெண்ணின் நனவிலி மனதின் வெளிப்பாடுகளைப் பெண்ணால் மட்டுமே வெளிக்கொணர முடியும்.அந்தவகையில் ஆண்டாள் கவிதைகள் சமயம் கடந்த அழகியலையும், உலகியல் இசைந்த காதலையும் கொண்ட பெண்ணின் அகவெளியைப் பெண்நிலை சார்ந்து வெளிப் படுத்தியுள்ளன எனலாம்.

**குறிப்புகள்**

[1] ஆனந்தி, ந. முனைவர். *பெருமாள் திருமொழி.* ராமையா பதிப்பகம், 2010.
[2] கண்ணன், எஸ். *பெரியாழ்வார் ஆண்டாள் பாசுரங்கள்.* சமூக சமயப் பண்பாட்டு ஆய்வு.
[3] சதாரா மாலதி. *உயர்பாவை.* சந்தியா பதிப்பகம், 2005 .
[4] சுசீலா, எம். ஏ. *தமிழிலக்கிய வெளியில் பெண்மொழியும் பெண்ணும்.* மீனாட்சி புத்தகாலயம், மதுரை, 2001.
[5] செல்வி திருச்சந்திரன், *தமிழ் வரலாற்று படிமங்கள் சிலவற்றில் பெண்நிலை நோக்கு.* குமரன் புத்தக நிலையம், 1997.
[6] நடராசன், தி. சு. *திறனாய்வுக் கலை-அணுகுமுறைகளும் கொள்கைகளும்.*
[7] பாத்திமா சூசைமணி, முனைவர். *தமிழ்ப் புனைகதைகளில் உளவியல்.* உலக தழிழாராய்ச்சி நிறுவனம், 2007.
[8] மணவாளன், அ. அ. *தமிழ்ப் பக்தி இலக்கியம்.* சாகித்திய அகாதெமி, புது தில்லி, 2004.
[9] வெள்ளைவாரணன், க, பேராசிரியர். *தொல்காப்பிய பொருளதிகாரம்,* மதுரை காமராசர் பல்கலைகழகம், மதுரை, 1983.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.